**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 08.06.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**உலக உணவு பாதுகாப்பு தினம் 2022**

உலக உணவு பாதுகாப்பு தினம் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் உணவு பதன்செய் துறையில் 07.06.2022 அன்று நடைபெற்றது. முனைவர் மு.பாலகிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். முனைவர் அ. ரவிராஜ், முதல்வர், வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோவை. அவர்கள் தலைமையுரை வழங்கி அதில் உணவு பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து, மேலும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தினார். சிறப்பு உரை வழங்கிய முனைவர் கிங்ஸ்லி ஆம்புரோஸ், பேராசிரியர், பர்டியூ பல்கலைக்கழகம், அமெரிக்கா அவர்கள் ஆய்வகத்தில் உணவு பதப்படுத்துதலின் போது கடைபிடிக்க வேண்டிய முக்கிய விதி முறைகளைப் பற்றி விளக்கினார். இவ்விழாவில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். இறுதியாக முனைவர் க.குருசாமி, உதவிப் பேராசிரியர் (உயிர் வேதியியல்) அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்